★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 ஜனவரி 7 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 89 இல. 06 | January 07, Thursday, 2021 | 20பக்கங்கள் | 30/-

வீட்டிலிருந்தவாறு மொபிடெல் உடன் இணைந்து வேலை செய்யுங்கள், கல்வி பயிலுங்கள்.
25GB ரூபா. 150/-
+ வரிகள்
செயற்படுத்துவதற்கு அழையுங்கள் #178#
*விசேடமாக தெரிவு செய்யப்பட்ட பிளேட்போம்களுக்கு மட்டுமே
4G
SLTMOBITEL

கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கான இந்திய தயாரிப்பு மருந்து;

இந்திய தடுப்பூசி வழங்கலில் இலங்கைக்கு முன்னுரிமை

ஜனாதிபதி கோட்டாபயவிடம் கலாநிதி ஜெய்சங்கர் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை-இந்திய இருதரப்பு நட்புறவு குறித்தும் ஆராய்வு

கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்புக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள தடுப்பூசியை இலங்கைக்கு பெற்றுக்கொடுப்பதற்கு தயாராக உள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குமிடையிலான பேச்சுவார்த்தை நேற்றைய தினம் கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. அதன் போதே இந்திய வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் எதிர்கால திட்டங்கள் தொடர்பில் இங்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி இந்தியாவில் 06

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், கடற்றொழில் அமைச்சரும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவை நேற்று மாலை சந்தித்து உரையாடிய போது...

படையினர் போர்க்குற்றத்தில் ஈடுபடவில்லை;

ஜெனீவாவில் அரசு மீதான குற்றச்சாட்டை முறியடிப்போம்

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை படையினருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் போலியானவை என்பதனை நிரூபிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று 06

ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமத்துவம், நீதி, சமாதானம் மற்றும் கௌரவம்:

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற இலங்கை முன்னேற்றமும் செழிப்பும் அடையும்

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் நேற்று தெரிவிப்பு

ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமத்துவம், நீதி, சமாதானம் மற்றும் கௌரவம் ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவேண்டும். 13ஆவது திருத்தம் உள்ளிட்ட அர்த்தபுஷ்டியான அதிகாரப் பகிர்வின் மீதான இலங்கை அரசாங்கத்தின் உறுதிப்பாட்டில் அவை சார்ந்துள்ளன. இதன் பயனாக இலங்கையின் முன்னேற்றமும் செழிப்பும் நிச்சயமாக மேன்மையடையுமென இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிகார அமைச்சர் ஜெ... கார அமைச்சர் தினேஷ் கு... வுடனான சந்திப்புக்கு பின்...

அடக்கம் செய்ய அனுமதியளிக்காவிடின்

தற்கொலை குண்டுதாரியாக மாறப்போகிறாரா அஸாத்சாலி?

ஊடகவியலாளர் மாநாட்டில் விமல் வீரவன்ச

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்காவிட்டால் விளைவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுமென அஸாத் சாலி தெரிவித்திருக்கிறார்.

அவ்வாறெனின் அவர் தற்கொலைக் 06

ஹற்றனில் இறந்த நிலையில் சிறுத்தை குட்டியின் உடல் மீட்பு

ஹற்றன், [illegible] டிவிசனில், சிறுத்தைக் குட்டியொன்று இறந்த நிலையில் ஹற்றன் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் வழங்கிய தகவலுக்கமைய, 06

மட்டக்களப்புக்கு ... உபகரணத்தை ...

பிரதமரின் கவனத்திற்கு ...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ... மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற ... உறுப்பினர் இரா.சாணக்கியனின் ... தலையீடு காரணமாக கிழக்கு மாகாண ... மக்களின் மிக முக்கிய பிரச்சனை... வில் ஒன்றுக்கு தீர்வு கிடைத்துள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தி... யசாலையில் காணப்படுகின்ற புதிய ... இருதயவியல் பிரிவின் ஆய்வுகூ...

...றுத்தி அதனை களுத்துறை மாவட்டத்திற்கு மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 06

...ர கிடைத்தவுடன் ...கள் வந்துசேரும்

...எம்.பிக்கு பவித்திரா பதில்

...பிரமணியம்

...ல் தடுப்பூசிகளை ...ண்டுவர முன்னர் ...ல் ஏற்படும் பக்க ... ஆராய வேண்டியுள்ளது. இது தொடர்பில் ஆராய நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த நிபுணர் குழுவின் பரிந்துரைகள் எமக்கு கிடைக்கப் பெற்றவுடன் தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை 06

1000 ரூபா சம்பள பிரச்சினைக்கு எதிர்கட்சி இந்த அளவுக்கு குத்தி முறியுது. பாராட்ட வேண்டிய விஷயம் தான்..

அஞ்சு வருஷமா இவைதானே கொடுக்க விடாம இழுத்தடித்து காலத்தை கடத்தினவ, இப்ப பெருசா நீலிக் கண்ணீர் வடிக்கினம்..!!!

தோட்டத் தொழிலாளரை இம்முறையும் ஏமாற்றினால் போராட்டம் வெடிக்கும்

மஸ்கெலியா எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தொழிலாளர்கள் கோஷம்

மஸ்கெலியா தினகரன் நிருபர்

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக 1,000 ரூபாய் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி மஸ்கெலியா நகரில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பெருந்தோட்டத் 06

இன ஒற்றுமைக்கான இடமாக பாராளுமன்றத்தை பயன்படுத்துவோம்

நீதியமைச்சர் அலிசப்ரி அழைப்பு

ஷம்ஸ் பாஹிம், நிஷாந்தன் சுப்ரமணியம்

ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு தொடர்ந்து பிரிந்திருப்பதா? ஒன்றிணைந்து முன்னேறிச் செல்வதா? என்று நாம் சிந்திக்க வேண்டும். இனங்களுக்கிடையில் ஒற்றுமை வளர்ப்பதற்கான இடமாக இந்த பாராளுமன்றத்தை பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். சில சட்டத் திருத்தங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய அவர் 06

13 உடன் ஒன்றிணைந்த இலங்கைக்குள் அர்த்தமுள்ள அதிகார பகிர்வு;

ஜனாதிபதியிடம் ஜெய்சங்கர் விடுத்த கோரிக்கைக்கு நன்றி கூறிய TNA

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

13ஆவது திருத்தச்சட்டத்தின் முன்னேற்றகரத்துடன் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டுமென இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நன்றி தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் கோரிக்கையின் பிரகாரம் ஜனாதிபதி வழங்கியுள்ள உறுதிமொழிதான் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்றால் எதிர்காலத்தில் அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராகவே உள்ளோம் என்றும் அவர் கூறினார். 06

Dialog 4G MOBILE Office மற்றும் கற்றல் செயற்பாடுகளுக்கு ANYTIME டேட்டா பக்கேஜ்
Zoom, Google, Microsoft, YouTube, கற்றல் Apps மற்றும்
இணையத்தள பாவனைக்கு விசேட கட்டணங்கள்